**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**
**HMOP. No.158/2024**

ம.சா.1 தேதி.17.07.2026

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரண்யா | த/பெ. | முருகதாஸ் |
| வயது | 30 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு **முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது.

எனது தரப்பு ஆவணங்களாக 11.06.2017 தேதிட்ட திருமண அழைப்பிதழ் **ம.சா.ஆ.1** ஆகவும், 11.06.2017 தேதியில் திருமணத்தின் போது எடுக்கப்பட்ட திருமண புகைப்படம் **ம.சா.ஆ.**2 ஆகவும், மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை **ம.சா.ஆ.3** ஆகவும்,. மனுதாரரின் மைனர் மகள் ஆதார் அடையாள அட்டை **ம.சா.ஆ.**4 ஆகவும், 12.03.2021 தேதியிட்ட மனுதாரர் மைனர் மகள் பிறப்பு சான்றிதழ் **ம.சா.ஆ.5** ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.